# Naam yengu sendraalum

Naam yengu sendraalum
Deivathai yum mahimai yaiyum paada vendaam…
Uyar sorkalai thedi allal ura vendaam…
Naam avatileye moolguvadaal.

Naam yengu sendraalum
Nam thagudiyai veli kaatta thevai illai
Nam kurudiyai sandhehikka vendiyadhu illai
Naam oruvare enbadhaal.

Naam yengu sendralum
Maayaikalai unmaiyena mayanga vendaam
Thevaikku mel ondrum theda vendaam
Manachaanthi nammai soozhndhiruppadhaal.

Naam yengu sendralum
Kaalai maalai ena kaalathai pirikka vendaam
Vannangalil karumai venmai bhedham bendaam
Naan nii yen naam kooda illaamal povadaal

Naam yengu sendraalum
Nam magharishigal, maghilvugal, kalaigal,
Mahaangal, mannargalai marakka thevai illai.
Avargal yendrumee paranjodhi yudan inaindhi irippargal.

Indha ellai atra paranjodhiye nammai vali nadathum.

Tamil adaptation from “Là où nous allons”: Priya K.Murthy, priyakm16@gmail.com

# நாம் எங்கு சென்றாலும்

நாம் எங்கு சென்றாலும்
தெய்வத்தையும் மகிமையையும் பாட வேண்டாம்
உயர் சொற்களைத் தேடி அல்லலுற வேண்டாம்
நாம் அவற்றிலேயே முழுகுவதால்

நாம் எங்கு சென்றாலும்
நம் தகுதியை வெளிக்காட்டத் தேவையில்லை
நம் குருதியை சந்தேகிக்க வேண்டியதில்லை
நாம் ஒருவரே என்பதால்

நாம் எங்கு சென்றாலும்
மாயைகளைத் உண்மையென மயங்க வேண்டாம்
தேவைக்கு மேல் ஒன்றும் தேட வேண்டாம்
மனச்சாந்தி நம்மை சூழ்ந்திருப்பதால்

நாம் எங்கு சென்றாலும்
காலை மாலையென காலத்தைப் பிரிக்க வேண்டாம்
வண்ணாங்களின் கருமை வெண்மை பேதம் வேண்டாம்
நான், நீ ஏன் நாம் கூட இல்லாமல் போவதால்

நாம் எங்கு சென்றாலும்
நம் மகரிஷிகள், மகிழ்வுகள், கலைகள்,
மகான்கள், மன்னர்களை மறக்கத் தேவையில்லை
அவர்கள் என்றுமே பரஞ்சோதியுடன் இணைந்து இருப்பார்கள்

இந்த எல்லையற்ற பரஞ்சோதியே நம்மை வழி நடத்தும்